# கருணை - KARUNAI

## தமிழ் - ENGLISH

திருவள்ளுவர் ஆண்டு 2044
1st July 2015
வருட சந்தா ரூ. 100
மட்டும்

*கடவுள் நம்பிக்கை,*
*ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை இதழ்*
***Volume : 6 Issue : 1***

**உரிமை மற்றும் பதிப்பாளர்:**
திருமதி.
இராமலெட்சுமி
இளங்கோ,M.A.,
செல் : 9095050785, 9487683114

**ஆசிரியர்:**

திரு.A.G.சந்திரமோகன்.
செல் : 9442038770

**உதவி குழு:-**
தயவு.திரு.P.சுப்பாராஜ்,M.A. B.L.
செல் : 9443794751
அருள்
திரு.G.சுப்பிரமணியன்
செல் : 9842818242
கருணை திரு.
S.R. கண்ணப்பன்
செல் : 9443022146

**கௌரவ ஆலோசகர்:**
**திரு H. தாயுமானவர்**, B.L.,

உயர்திரு Dr. ஜெய. இராஜமூர்த்தி
உயர்திரு. **C.** ஆறுமுகம்

**Place of Publication**
Karunai Sabai Salai Trust,
Grace Hall
34, Poombukar Nagar,
North Extn. Uthangudi,
Madurai-625 107.

அன்புடையீர்! வணக்கம்.

சுத்தசன்மார்க்க நெறியை மக்களுக்கு வெளிப்படுத்திய பல சான்றோர்கள், பெரியோர்கள் அன்பர்கள் ஆகியோர்களின் பணிகளில் உள்ள தியாக உணர்வு, அயராத உழைப்பு, பொருள் இழப்பு இவைகளை நாம் நினைவுகளில் பதித்துக் கொள்ள வேண்டும். அவர்களின் முயற்சியை வெற்றி ஆக்குவதே நம் லட்சியமாக ஏற்க வேண்டும். நம் சான்றோர்களின் நூல்களும் வள்ளலாரின் வழியும் இறையருளை பெற்றுத்தரும் என்பதில் ஐயமில்லை.

நன்றி வணக்கம்.

| | |
|---|---|
| அருட்பெருஞ்ஜோதி | அருட்பெருஞ்ஜோதி |
| தனிப்பெருங்கருணை | அருட்பெருஞ்ஜோதி |

**இப்படிக்கு**

**ஆசிரியர்** A.G.சந்திரமோகன்,
தயவு. P.சுப்பாராஜ் அருள் G.சுப்பிரமணியன்,
கருணை S.R. கண்ணப்பன்

# உயர்நீதிமன்றம் உத்தரவு

வள்ளலார் தெய்வ நிலையத்திற்கு நியமிக்கப்படும் டிரஸ்டிகள் சுத்தசன்மார்க்கத்தார்களாக இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை அரசு பரிசீலிக்க உயர்நீதிமன்றம் உத்தரவு.

கடலூர் மாவட்டம் வடலூரில் அமைந்துள்ளது திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையங்கள். மேற்படி நிலையங்கள் அதாவது சத்திய தருமசாலை, சத்திய ஞானசபை, சித்தி வளாகம் மற்றும் கருங்குழி & மருதூர் இல்லங்கள் அனைத்தும் மேதகு தமிழக அரசால் மற்றும் இந்து சமய மற்றும் அறநிலைய கட்டளை சட்டம் 1959ன் கீழ் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மதுரை, திருச்சி மற்றும் குறிஞ்சிபாடி அன்பர்களின் சார்பாக திருவாளர்கள் 1. கே.எஸ். சகாதேவராஜா, 2. G. சுப்பிரமணியம், 3. A.G. சந்திரமோகன், 4. T. கங்காதரன், 5. சரவணன் ஆறுமுகம் கீழ்வரும் கோரிக்கையை அரசு மற்றும் ஆணையருக்கு வைத்து வேண்டினார்கள்.

இயற்றப்பட வேண்டிய விதிகள்

1. தமிழக அரசால் வடலூர் திருவருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்திற்கு நியமிக்கப்படும் ஐந்து பரம்பரை அல்லாத அறங்காவலர்களில், மூன்று பேர்கள் வள்ளலாரின் சுத்தசன்மார்க்கத்தை சார்ந்தவர்களாக இருக்க வேண்டும்.
2. மேற்படி சுத்த சன்மார்க்கம் சார்ந்த அறங்காவலர்களை, தெய்வநிலையத்தால் நடத்தப்படும் "சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் ஆயுள்கால உறுப்பினர்களிலிருந்து" தேர்ந்தெடுக்கலாம்.

3. நியமிக்கப்படும் ஐந்து அறங்காவலர்கள் அனைவரும் வள்ளலார் கட்டளைப்படி "கொலை புலை" தவிர்த்தவர்களாக இருக்க வேண்டும்.

கடலூர் மாவட்டம் வடலூர் திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வநிலையங்களில் பரம்பரை அல்லாத ஐந்து அறங்காவலர்கள் அரசால் நியமிக்கப்படுகிறார்கள். இதுவரை வள்ளலார் நிலையங்களை நடத்த நியமிக்கப்பட்ட அறங்காவலர்கள் வள்ளலாரின் கொள்கையை பின்பற்றுபவர்கள் கிடையாது. பொதுவான அடிப்படையிலேயே அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்கள், உலகில் காணும் சமய, மத மார்க்கங்களை அதாவது சைவ சமயம் அல்லது வைணவ சமயத்தை சார்ந்தவர்களாகவே இருக்கின்றார்கள்.

இதனாலேயே, தெய்வநிலையங்களில் வள்ளலாரின் கொள்கைக்கு முரணான வகையில் வழிபாடுகள் நடைபெற்று வந்தது, நிலைய சொத்துக்கள் பறிபோயின. வள்ளலாரை, அவரால் கைவிடப்பட்ட சைவ சமயத்திலேயே வெளிப்படுத்தினார்கள்.

இதற்கெல்லாம் ஒரே காரணம் :

நியமிக்கப்பட்ட அறங்காவலர்கள், வள்ளலாரின் சுத்த சன்மார்க்கத்தில் "பற்று இல்லாமல்" இருந்ததே.

அறங்காவலர்கள் வள்ளலாரின் முடிவான சுத்த சன்மார்க்க கொள்கைப்பற்றி சரியான முறையில் தெரிந்து கொண்டிருக்கவில்லை.

ஆக, வள்ளலாரின் கொள்கையில் பற்று உள்ளவர்களாக இல்லாததினாலும், வள்ளலாரின் தனி நெறியை அறியாததினாலும், பல வருடங்களாக அறங்காவலர்கள் தவறிழைத்தவர்களாக இருந்தார்கள். பல முரணான சமய மார்க்க வழிபாடுகள் பல வருடங்களாக நிலையத்தில் நடைபெற்று வந்தன. வருகின்றன.

மார்க்க அன்பர்களின் அயராத தொடர் முயற்சிகள் மற்றும் உயர்நீதிமன்ற ஆணைகள் அடிப்படையில் மட்டுமே முரணான சமய வழிபாடுகள் தடுக்கப்பட்டன. நிலைய சொத்துக்கள் மீட்கப்பட்டன.

***விண்ணப்பத்தினை பரிசீலிக்க வேண்டிய அவசியம்.***

திரு. அருட்பிரகாச வள்ளலார் ஆரம்ப காலங்களில் “சைவ சமயத்தை” தழுவி, பல ஆயிர சமய ஸ்தோத்திரப்பாடல்கள் பாடி சமய கடவுளர்களை துதித்து வந்தார்கள். அதன்பின்பு அவர், தான் வைத்திருந்த சமயப் பற்றினை முழுவதுமாக, முற்றும் பற்றற கைவிட்டு விட்டு ஒரு புதிய மார்க்கத்தை (சுத்த சன்மார்க்கம்) ஒரு புதிய கடவுளை, ஓர் உண்மை பொது நெறியை கண்டு உலகிற்கு வெளிப்படுத்துகிறார்கள்.

- தான் கண்ட சுத்த சன்மார்க்கத்துக்கு முக்கிய தடைகளாக சமயங்கள் மார்க்கங்களை அறிவிக்கிறார்கள். மேற்படி சமய மதங்களின் ஆசார சங்கற்ப விகற்பங்கள் மனதில் பற்றாத வண்ணம் இருத்தல் வேண்டும் என்கிறார்கள். (ஆதாரம் : உ.ந.பகுதி 560)
- உலகில் காணும் சமய மத முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களே சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்கள் (ஆதாரம் : உ.ந.பகுதி பக். 411) என்கிறார்கள்.
- சுத்த சன்மார்க்கத்தில் வருகிற உண்மை கடவுள், இதற்கு முன் சமய சாத்திர புராணங்களில் வந்ததாக சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக் கர்த்தர்கள், மூர்த்திகள், கடவுள், தேவர், அடியார், யோகி, ஞானி முதலானவர்களில் ஒருவரல்ல எனத் தெளிவாக அறிவிப்பு மூலம் அறிவிக்கிறார்கள். (நாள். 12.04.1871 உ.ந.பகுதி பக்கம் : 547)

- சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும், வேதாந்தம், சித்தாந்தம் முதலிய மதங்களிலும் லட்சியம் வைக்க வேண்டாம். (பேருபதேசம் பக்கம். 468)
- தனது மார்க்கத்தால் "இறவாத வரம் பெறலாம்" என அறிவிக்கிறார்கள். மேலும் "உலகியலீர் இதுவரையும் உண்மையறிந்தலிரே" என்கிறார் வள்ளலார். (ஆதாரப் பாடல் எண். 1530)
- தான் கண்ட "சுத்த சன்மார்க்கத்திற்கு" கீழ்வருமாறு பொருள் தருகிறார்கள். (உ.ந.பகுதி பக்கம் : 402)

"சன்மார்க்கம் சிவசன்மார்ககம்
இரண்டையும் மறுத்தது
சுத்த சன்மார்க்கம்"
"பூர்வத்தில் நின்ற சமய மத சன்மார்க்கங்களை
மறுப்பது சுத்த சன்மார்க்கம்."

- தான் கண்ட உண்மை கடவுளான "சுத்த சிவம்" பற்றி குறிப்பிடுகையில்;
  "சிவம் பரமசிவம் இரண்டையும்
  மறுத்தது சுத்த சிவம்"
  சுத்த சன்மார்க்க ஒழுக்கம் எதுவெனில்; (பக்கம் 410-ல்)
  "எல்லா பற்றுக்களுக்கும் காரணமான ஆசார
  வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள்".

- இந்த முடிவான உண்மை பொதுநெறியான "சுத்த சன்மார்க்கத்தை" வெளிப்படுத்தும் பொருட்டே 1871ம் ஆண்டு "சத்திய ஞான சபையை" தோற்றுவித்தார்கள். முடிவான இந்த நெறியைதான் திருஅகவலில் விளக்குகிறார்கள்.

- சுத்த சன்மார்க்கத்தினை உலகிற்கு 12.04.1871ல் ஓர் அறிக்கை மூலம் வெளிப்படுத்துகிறார்கள்.
- சுத்த சன்மார்க்கத்திற்கு கொள்கை, (1873) கொடி அறிவிப்புகள், விளம்பரம் (25.11.1872) கட்டளைகள் (09.03.1872) விண்ணப்பங்கள், பிரார்த்தனை (12.05.1872) பாடல்கள், அகவல் (1872) வழிபாட்டு விதிகள் (18.07.1872) பழக்கவிதி (25.11.1872) எச்சரிக்கை, பயிற்சிகள், தகுதிகள், தடைகள் பேருபதேசம் (1873) பாடசாலை (1873) மரபுகள் நான்கு என உள்ளது.

இங்ஙனமாக, இங்ஙனமாக மட்டுமே, வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம் இருக்கின்றபோது,

- அவர்தம் நிலையங்களை நல்ல முறையில் நடத்த வேண்டிய கடமையில் உள்ள அறங்காவலர்கள் கவனத்துடன் கண்காணித்து நடத்தவில்லை. முந்தைய சமய கொள்கையிலே அவரையும், சமய, மத சாத்திர சடங்குகளில் நிலையத்தையும் நடத்தினார்கள்.

இதனால் வள்ளலாரின் முடிவான நெறியை உள்ளது உள்ளபடி உலகிற்கு வெளிப்படுத்தாமல் பல வருடங்களை வீணாக்கி விட்டார்கள். அதாவது,

1. தவறான முறையில் நடந்து வந்த சமய சாத்திர வழிபாட்டு முறையை தடுக்காமல் இருந்தார்கள்.
2. நிலையங்களின் சொத்துக்களை பாதுகாக்காமல் இருந்துள்ளனர்.
3. வள்ளலாரை, அவரால் கைவிடப்பட்ட முந்தைய சைவ சமய அடையாளத்திலேயே வெளிப்படுத்தினார்கள்.
4. சத்திய ஞான சபையினுள் அனுமதிப்பது, அவர் தம் கட்டளைப்படி செயல்படுத்தவில்லை.

5. அவரால் கைவிடப்பட்ட சமய ஸ்தோத்திர பாடல்கள் அடங்கிய புத்தகங்கள் அச்சடித்து வெளியிடப்பட்டன. விழா பத்திரிக்கையில் சாஸ்திரப்படியால் வழிபாடுகள் அச்சடிக்கப்பட்டன.

மேற்படி கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரங்கள் நிறைய உள்ளது. வெளியிலிருந்து இந்த முரணான விசயங்களை நாங்கள் (சுத்தசன்மார்க்கத்தார்கள்) எடுத்துச் சொல்லியும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததே உண்மை. அதனாலேயே தான், ஒவ்வொரு விசயத்திற்கும் மேதகு நீதிமன்றத்திற்கு சென்று, உரிய ஆணையாலேயே முரணான செயல்களை தடுத்தும், சொத்துக்களை மீட்டும் உள்ளோம். அதன் விபரங்கள்.

- சத்திய ஞானசபையில்
  வள்ளலார் கொள்கைக்கு முரணான
  வகையில் வழிபாடு நடைபெற்றதை தடுக்க இணை ஆணையரிடம் விண்ணப்பம். அதன் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் 2006-ல் வழக்குகள். அதையடுத்து இணை ஆணையர் ஆணையிட்டு அவை தடுக்கப்பட்டன.

- முரணான செயல்கள் தொடர்ந்து நடைபெறாமல் இருப்பதற்கு விண்ணப்பம் விண்ணம் நாள் 15.09.2007. அதன் தொடர்பாக உயர்நீதிமன்றத்தில் வழக்குகள். அதையடுத்து ஆணையர் ஆணை எண். **R.P. Nos. 71 & 72 / 2006.**

- பின்பு வள்ளலாரை சமயகோலத்தில் காட்டியதை எதிர்த்து மத்திய அரசு மீது வழக்குகள்

- பின்பு வள்ளலாரின் சங்கத்தில் சேர்க்கப்படும் உறுப்பினர்களின் தகுதிகள்

விண்ணப்பம் 19.04.2008
மேதகு உயர்நீதிமன்றத்தில் வழக்கு அதற்காகவும்
அதைதொடர்ந்து உதவி ஆணையர் கடிதம்
ஒ.மு.எண். 5601/2008/இ1

- பின்பு வள்ளலார் கட்டளைப்படி
சத்திய ஞான சபையினுள் அனுமதித்தல்
விண்ணப்பம் 20.11.2009
அதற்காகவும் உயர்நீதிமன்றத்தில் 2010-ல் வழக்கு
அதையடுத்து செயல் அலுவலர் கடிதம் நாள்.
22.01.2010-ல் உறுதியளிக்கப்பட்டு வழக்கு முடிக்கப்பட்டது.

- தெய்வநிலையத்திற்கு சொந்த இடங்களை
மீட்க விண்ணப்பம் - 16.07.2009
சட்டப்படியான நடவடிக்கை இல்லை.
பரிசீலிக்க மேதகு நீதிமன்றங்களை நாடி
பலவழக்குகள் அதன் காரணமாக பல ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டன.

- மார்க்க பழக்க வழக்கள்
படி நிலையங்கள் நடைபெறுவதற்கான தனி
வழிகாட்டுதல் ஆணைக்கான
விண்ணப்பம் 21.12.2012

இதற்கும் மேதகு நீதிமன்றம் நாடி வழக்குகள் போடப்பட்டது.

இணை ஆணையரின் கடித எண். 8533/2012/ ஆ2 மூலம் விசாரணை மேற்க்கொள்ளப்பட்டது. சிறப்பான உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

- இன்னும் பல விசயங்கள் - பல விண்ணப்பங்கள் - பல வழக்குகள்
- எங்களின் தொடர் முயற்சியால்தான் 2007ம் ஆண்டு புதுப்பிக்கப்பட்ட திட்டத்தில் விநாயகர்சதுர்த்தி, சரஸ்வதிபூஜை, கார்த்திகை தீபம், தீபாவளி முதலிய சமய விழாக்கள் நீக்கப்பட்டன.
- மேலும் பல ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டன.
- வழிகாட்டுதல் ஆணை வேண்டும் என்ற கோரிக்கை அடிப்படையில் இணை ஆணையரின் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

எனவே தான் மேதகு தமிழக அரசு எங்களின் கோரிக்கை நியாயத்தை உறுதிசெய்ய ஆவணங்களை வரவழைத்து பரிசீலித்து உரிய உத்திரவு பிறப்பிக்க வேண்டுகிறோம்.

1. தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைய கட்டளைகள் சட்டம் 1959, உள்ள பிரிவுகள் 6 (15) (a) (b) : பிரிவு 26, 28 என் அடிப்படையிலேயே, ஐந்து அறங்காவலர்களில் குறைந்தது மூன்று அறங்காவலர்களாவது கொள்கை பற்றுள்ளவராயிருக்க வேண்டும் எனப் பிரார்த்திக்கிறோம்.
2. பிரிவு 24ன் அடிப்படையிலேயே நியமிக்கப்படும் அறங்காவலர்கள் அனைவரும் திருஅருட்பிரகாச வள்ளலாரின் கட்டளைப்படி “கொலை புலை” தவிர்த்தவர்களாக இருக்க வேண்டும்.

மேலும்,

3. பிரிவு 15ன்படி வள்ளலார் மார்க்கக் கொள்கையை பின்பற்றுபவராக, உரிமையுள்ளவராயிருக்கிற மூன்று நபர்களை, வள்ளலாரால் தொடங்கப்பட்டு இன்றுவரை செயல்பட்டுவரும் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கத்தின் ஆயுள்கால உறுப்பினர்களிலிருந்து அரசால் தேர்ந்தெடுக்கலாம்.

(மேற்படி சங்க உறுப்பினர்கள் என்பவர்கள். வள்ளலார் கட்டளைப்படி உலகில் காணும் **சமய மத மார்க்கங்களில் "முற்றும் பற்றற கைவிட்டவர்களும்", "கொலை புலை தவித்தவர்களும்" காமகுரோதத்தை ஞான அறிவினால் தடுத்துக்கொள்பவர்கள் ஆவார்கள்.)**

வடலூர் திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையங்கள் மேதகு தமிழக அரசின் கீழும், தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைய கட்டளைகள் சட்டம் 1959ன் கீழும் சிறப்பாக செயல்பட வேண்டும் என்பதே எங்கள் நோக்கமாக உள்ளது என்பதை உங்களிடம் தெரிவித்துக்கொள்ள விருப்பப்படுகிறோம்.

இதன் விசயமாக குறிஞ்சிபாடி திரு. சுப்பிரமணியம், திருச்சி திரு. கங்காதரன் அவர்களை தொடர்பு கொண்டதில், கடந்த 31.07.2015ல் எங்கள் கோரிக்கையை அரசு மற்றும் ஆணையர், சென்னை ஆகியோர் சட்டப்படி விசாரிக்க மேதகு உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. இதில் திரு. M. கண்ணன் வழக்கறிஞர் ஆஜராகி வாதிட்டார்கள். இச்செயல்களை நாங்கள் கடமையாகவே நினைக்கிறோம். இதுவரை தன்னை வெளிக்காட்டி கொள்ளாத அன்பர் ஒருவர் கடந்த 12 வருடங்களாக தொடர்ந்து பல நல்ல காரியங்களை செய்து வருகிறார். அவருடன் சேர்ந்து பணியாற்றுவதை நாங்கள் சிறப்பாக நினைக்கிறோம் என்றனர்.

நன்றி

## வள்ளலாரை போல் எவரும் ஒளிவடிவம் பெறவில்லையே!

### ஒன்றும் புரியவில்லையே!....... தெரியவில்லையே !...........

**- APJ. Arul**

என் மார்க்கம் இறப்பையொழிக்கும் மார்க்கம்.
சாகாகல்வியை தவிர வேறு ஒன்றுமில்லை.
- வள்ளலார்.

திருஅருட்பிரகாச வள்ளலாரின் சமரச சுத்த சன்மார்க்க நெறியை தழுவி, சங்கத்தை நிறுவி, அதில் தன்னை பல வருடங்களாக இணைத்துக் கொண்டிருந்த பெரியவர்கள் பலர் நம்மிடம் இன்று இல்லை.

அவர்கள் அனைவரும் பெரியவர்கள், சான்றோர்கள் என்பதை எல்லாருமே அறிவோம். “தயவு” என்பதில் உண்மையாக இருந்து வாழ்ந்த திண்டுக்கல் அய்யா முதல், கருணைமிகு பொள்ளாச்சி அய்யா, அருட்பா அவதானி திரு. சி. செகநாதன் அய்யா வரை நாம் கண்ட பெரியோர்கள் பலர் ஆவார்கள். ஜீவகாருணயத்தில், அருட்பாவுக்கு ஆற்றிய பணிகளில் மிகவும் சிறந்தவர்களாக அவர்கள் விளங்கியவர்கள். “தயவு” திண்டுக்கல் அய்யாவின் விளக்கவுரையால் சுத்த சன்மார்க்கத்தை தழுவியவர்கள் ஆயிரக்கணக்கானோர். அதில் ஒருவள் நான்.

புதுக்கோட்டை திரு. செகநாதன் சொற்பொழிவுகளில் அருட்பாவை அருந்தியவர்கள் நிறைய பேர். பல்லாயிரக்கணக்கான மேடை சொற்பொழிவுகள் ஆற்றினார். அவரின் பல நல்ல நூல்களை நாம் பெற்றுள்ளோம். அதே போல் பொள்ளாச்சி அய்யாவின் அரும்பெரும் பணிகள் கணக்கில் அடங்காது. இந்த சான்றோர்கள் மட்டுமில்லை கடந்த நூறு வருடங்களுக்கும் மேலாக பல சான்றோர்களை நாம் பெற்றியிருந்தோம். ஆனால், இன்று அவர்கள் நம்மிடம் இல்லை. அவர்களை

தொடர்ந்து வந்த நாம், வழி தெரியாமல் திகைத்துள்ளோம்.

வள்ளலாருக்கு பின் வள்ளலாரை போல் இறவா "தனி வடிவம்" எவரும் (தெரிந்தவரை) பெறவில்லை. அல்லது ஏன் பெறவில்லை?

இக்கேள்வியை கேட்கும் காலம் வந்துவிட்டது. நமக்கு நாமே இன்று கேட்டுக்கொள்ளவில்லை என்றால், நம்மிடம் மற்றவர்கள் கேட்க தயாராகிவிட்டனர்.

வள்ளலாரின் சுத்தசன்மார்க்கத்தின் பயனாகிய;

"சாகாமல் ஓங்கும் வடிவம்"

"தனிவடிவம்"

"அழியா தேகம்"

பெறுவது சாத்தியமா?

வள்ளலார் அவர்கள் தெளிவாக சொல்கிறார்கள்;

"என்மார்க்கத்தில்
சாகாகல்வியை தவிர வேறு ஒன்றுமில்லை"

இந்நிலையில், "மரணமில்லா பெருவாழ்வில்" நம்பிக்கை இல்லாதவர்கள் வள்ளலாரின் தனிநெறியில் இருக்க முடியாது.

நாம் மேலே சொன்ன பெரியவர்கள், சான்றோர்கள் அனைவருமே வள்ளலாரின் சுத்த சன்மார்க்க தனி நெறியில் நம்பிக்கை கொண்டு வாழ்ந்தவர்களே. சாகா கல்வி என்பதை பற்றி நூல்கள் எழுதி உள்ளார்கள்.

அவர்கள் அனைவருமே வள்ளலாரை போல் "தனி வடிவம்" பெறவில்லை. நம்மால்..........????

முடியும் எனச் சத்தியமாக கருத்தில் கொள்வோம். நம்மால் முடியும் என்று தான் "தயவு" திண்டுக்கல் அய்யா நூல்களில் எழுதி உள்ளார்கள்.

"என்போல் பெறுக இவ்வையகம்" என்கிறார் நம் வள்ளலார். என்னை போல் நீங்களும் பெறுவதாக உள்ளது என சத்தியம் செய்து சொல்கிறார் வள்ளலார்.

நிற்க!

மேற்படி மரணமில்லா பெருவாழ்வு பெறுவதற்கு வள்ளலார் சொல்லியபடி செயல்படுபவர்களால் மட்டுமே பெறுவதாக உள்ளது.

வள்ளலாரின் முழுநம்பிக்கைக்கு உரியவராக இருந்தவரும் அன்பு உள்ளம், உண்மை இரக்கம், தெய்வ பக்தி உடைய கல்பட்டு அய்யாவும் "தனிவடிவம்" பெறவில்லையே? வள்ளலார் அவருக்கு கொடுக்கவில்லையே! ஏன்?

வள்ளலார் கண்டது "ஓர் உண்மை பொது நெறி" அதில் கண்ட கடவுள் "ஒரு புதிய உண்மை கடவுள்" என்பதை முதலில் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். சாந்தம், கொல்லாமை, ஜீவகாருண்யம், இந்திரிய நிக்கிரகம் இவையால் மட்டும் வைத்து சாகா கல்வியாம் சிற்றம்பல கல்வியை கற்றுவிட முடியாது என அறிதல் வேண்டும். Basic என்பது வேறு Subject என்பது வேறு. இங்கு இரக்கம், அன்பு, ஜீவகாருண்யம் போன்றவைகள் அடிப்படை (Basic) தகுதியாக உள்ளது என அறிதல் வேண்டும். ஒரே கடவுள், ஆசாரம் கைவிடல் மற்றும் சாகாகல்வி, முதலியவை கொள்கையாக (Subject) உள்ளது. வடலூர் சத்திய ஞான சபை கட்டிடத்தின் முகப்பில் உள்ள வாசகம்;

"கொலை புலை தவிர்த்தோர்
உள்ளே புகுதல் வேண்டும்"

தகுதியுடையவர்கள் உள்ளே சென்று அமர்ந்து பின்பும், அங்கு அன்பு, இரக்கம், ஜீவகாருண்யத்தை பற்றிதான் பேசவேண்டுமா?

இல்லை.

உள்ளே வள்ளலார் கண்டு வெளிப்படுத்திய சுத்த சன்மார்க்க நெறி குறித்து தான் நல்ல விசாரணை செய்ய

வேண்டும். அதற்கு நம்மை உரியவர்களாக்கி கொள்ள வேண்டும். ஆக;

முதலில் **தகுதி,**
பின், **உரியவர்களாகுதல்**
அதன்பின்பு, **நெறி குறித்து நல்ல விசாரணை.**

இதை வரிசையாக காண்போம்.

**1. தகுதி (Table 1)**

"கொலை புலை தவிர்த்தவர்களாக" இருத்தல் வேண்டும்.

**2. உரியவர்களாகுதல் (Table 2)**

1. சத்திய அறிவால் அறியப்படும் "கடவுள் ஒருவரே".
2. கடவுள் அருள் பெற "கருணை" ஒன்றே சரதனம் என சத்தியமாக அறிதல்.
3. ஓர் உண்மை கடவுள் உண்டென்றும் "உண்மை அன்பால்" கருத்தில் கருதி வழிபாடு செய்தல் வேண்டும்.
4. உலகில் காணும் சமய மத மார்க்கங்களில் முற்றும் பற்றற கைவிட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
5. காமகுரோதம் நேரிட்ட காலங்களில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்பவர்கள்.
6. மேற்படியாக தகுதிகளை (Table 1) பெற்றவர்கள் ஞான சபையில் நுழைந்து, நல்ல விசாரணை செய்ய உரியவர்களாக்கி (Table 2) கொள்ள வேண்டும்.
7. அதன்பின்பே "நல்ல விசாரணை" மேற்கொள்ள முடியும்.

**3. நல்ல *விசாரணை* (Table 3)**

கீழ்வருபவை குறித்து நல்ல விசாரணை செய்தல் வேண்டும்.

அதற்கு முன்,

நாம் எதற்காக நல்ல விசாரணை செய்தல் வேண்டும்? என்பதற்கு விடை தெரிந்திருக்க வேண்டும்.

1. சிற்றம்பலக் கல்வியை கற்பதற்கே.
2. கருணை நெறி அடைவதற்கே.
3. எக்காலமும் சாகாமல் ஓங்கும் ஒளிவடிவம் பெறுவதற்கே.
4. உயர்நிலை பெறுவதற்கே.

ஆகிய இவைகளுக்கே, இவைகளுக்கு மட்டுமே நாம் “நல்ல விசாரணை” செய்கிறோம். அதே நேரத்தில் இந்த விசாரணையில் நாம் செய்ய வேண்டியது யாதெனில்;

“உலகில் காணும் எந்தொரு நிலையையும் பற்றுதல் கூடாது”

இதற்கு ஆதாரப்பாடல்,

“கற்றேன்சிற் றம்பலக் கல்வியைக்
கற்றுக் கருணைநெறி
உற்றேன்எக் காலமும் சாகாமல்
ஓங்கும் ஒளிவடிவம்
பெற்றேன் உயர்நிலை பெற்றேன்
உலகில் பிற நிலையைப்
பற்றேன் சிவானந்தப் பற்றே
பற்றெனப் பற்றினனே”

“தெய்வங்கள் பலப்பல சிந்தைசெய் வாரும்
சேர்கதி பலப்பல செப்புகின் றாரும்
பொய்வந்த கலைபல புகன்றிடு வாரும்
பொய்ச்சம யாதியை மெச்சுகின் றாரும்
மெய்வந்த திருவருள் விளக்க மொன் றில்லார்
மேல்விளை வறிகிலர் விண்கழி கின்றார்
எய்வந்த துன்பழித் தவர்க்கறி வருள்வீர்
எனைப்பள்ளி எழுப்பிமெய் இன்பந் தந்தீரே”

அடுத்து,

“ஒளி வடிவாய் எங்கும் பரிபூரணமாக விளங்கும் ஒரே உண்மைக் கடவுள் நிலைகாண “ ஆசை” கொள்ள வேண்டும்.

அடுத்து செய்ய வேண்டியது என்ன தெரியுமா? அன்பர்களே, உண்மையில் ஒன்றுமில்லை. அப்படியென்றால் அடுத்து என்ன நடக்கும்? அதுதானே கேட்கிறீர்கள்.

அது அவரவர் “ஆசை” கொள்ளும் அளவிலும், உள்ளழுந்துவதிலும், சிந்திப்பதிலுமே, உள்ளது.

ஆம்,

இதோ இந்த பாடலை பாருங்கள் ;

நினைந்துநினைந் துணர்ந்துணர்ந்து
நெகிழ்ந்துநெகிழ்ந் தன்பே
நிறைந்துநிறைந்து ஊற்றெழுங்கண்
ணீரதனால் உடம்பு
நனைந்துநனைந் தருளமுதே
நன்னிதியே ஞான
நடத்தரசே என்னுரிமை
நாயகனே என்று
வனைந்துவனைந் தேத்துதம்நாம்
வம்மின்உல கியலீர்

மரணமிலாப் பெருவாழ்வில்
வாழ்ந்திடலாம் கண்டீர்
புனைந்துரையேன் பொய்புகலேன்
சத்தியஞ்சொல் கின்றேன்
பொற்சபையில் சிற்சபையில்
புகுந்தருணம் இதுவே..

புகுந்தருணம் இதுகண்டீர்
நம்மவரே நான்தான்
புகல்கின்றேன் என்மொழிஓர்
பொய்மொழிஎன் னாதீர்
உகுந்தருணம் உற்றவரும்
பெற்றவரும் பிறரும்
உடைமைகளும் உலகியலும்
உற்றதுணை அன்றே
மிகுந்தசுவைக் கரும்பேசெங்
கனியேகோற் தேனே
மெய்ப்பயனே கைப்பொருளே
விலையறியா மணியே
தகுந்ததனிப் பெரும்பதியே
தயாநிதியே கதியே
சத்தியமே என்றுரைமின்
பத்தியொடு பணிந்தே.

ஆக,

நாம் ஒவ்வொருவரும்,
நினைந்து நினைந்து
உணர்ந்து உணர்ந்து
நெகிழ்ந்து நெகிழ்ந்து
துதித்தல் வேண்டும்.

ஆமாம், எதை

நினைந்து, உணர்ந்து நெகிழ வேண்டும்? அதை காண ஆசைப்படுபவர்களின் நன்முயற்சிக்கு எல்லாம் வல்ல ஆண்டவர் துணை நிற்பது சத்தியம் சத்தியம் சத்தியம். நல்ல விசாரணை தொடருவோம்.

**நினைப்பதை குறித்தபாடல்**

பணிந்துபணிந் தணிந்தணிந்து
பாடுமினோ உலகீர்
பரம்பரமே சிதம்பரமே
பராமரமே வரமே
துணிந்துவந்த வேதாந்த
சுத்தஅனு பவமே
துரியமுடி அனுபவமே
சுத்தசித்தாந் தமதாய்த்
தணிந்தநிலைப் பெருஞ்சுகமே
சமரசசன் மார்க்க
சத்தியமே இயற்கையுண்மைத்
தனிப்பதியே என்று
கணிந்துளத்தே கனிந்துநினைந்
துரைத்திடில்அப் பொழுதே
காணாத காட்சிஎலாம்
கண்டுகொளல் ஆமே.

**உணர வேண்டியது குறித்தபாடல்**

கண்டதெலாம் அநித்தியமே
கேட்டதெலாம் பழுதே
கற்றதெலாம் பொய்யேநீர்
களித்ததெலாம் வீணே

உண்டதெலாம் மலமேஉட்
கொண்டதெலாம் குறையே
உலகியலீர் இதுவரையும்
உண்மையறிந் திலிரே
விண்டதனால் என் இனிநீர்
சமரசசன் மார்க்க
மெய்ந்நெறியைக் கடைப்பிடித்து
மொய்ப்பொருள்நன் குணர்ந்தே
எண்டகுசிற் றம்பலத்தே
எந்தைஅருள் அடைமின்
இறவாத வரம்பெறலாம்
இன்பமுற லாமே.

திருவருட்பிரகாச வள்ளலார் ஒவ்வொரு பாடல் தொகுப்பிலும் கீழ்வருபவையை மீண்டும் மீண்டும் நமக்கு ஞாபகபடுத்துவார்கள்.

அவை;

“கருணை!” - அக்கருணை “விருத்திக்கு தடையாக” சாதி, சமய கட்டுபாடு ஆசாரங்கள் உள்ளது.

“கடவுள் ஒருவரே! “

அந்த உண்மை கடவுளை“ உண்மை அன்பால் கருத்தில் கருதி” வழிபாடு செய்தல் வேண்டும்.

கடவுளின் நிலை காண “ஆசை” கொள்ளுதல் வேண்டும்.

“சிற்றம்பல கல்வியை” கற்றல்.

ஆனால், வள்ளலார் அறிவித்தது; (22.10.1873)

**“உண்மை சொல்ல வந்தனனே**

**உண்மை சொல்ல புகுந்தாலும்**
**தெரிந்து கொள்வாரில்லையே"**

நிற்க!

மேலே உள்ள திருவருட்பிரகாச வள்ளலாரின் வரிகளை மீண்டும் ஒருமுறை படியுங்கள்.

வள்ளலார் புறவடிவில் வாழ்ந்த காலத்தில் எவரும் அவர் சொன்ன உண்மை தெரிந்துக் கொள்ள முடியவில்லை. இன்று நாம் தெரிந்துள்ளோமா? இதோ நம்மை (சுத்த சன்மார்க்கத்தை சார்ந்துள்ளவர்கள் என அழைத்துக் கொள்பவர்கள்) சோதித்து பார்ப்போம்.

**ஆம் / இல்லை**

சத்திய அறிவால் அறியப்படும்
கடவுள் ஒருவரே

அவர் ஒளிவடிவமே என
கருத்தில் கொள்ளுதல்

கருணை விருத்திக்கு தடையாக
உள்ள சாதியில் சமயத்தில் பற்று இல்லை.

சாதி சமய கட்டுபாட்டு
ஆசாரங்களை கைவிட்டேன்.

கடவுள் நிலையறிய ஆசை கொண்டுள்ளேன்

சைவம், வைணம் மற்ற மார்க்கங்கள்,
வேதாந்தம் சித்தாந்தம் மற்றும் எந்தொரு
கலைகளிலும் பற்று கிடையாது

**ஆம் / இல்லை**

திருவருட்பாவிலுள்ள வள்ளலாரின்
முந்தைய சமய ஸ்தோத்திரப்
பாடல்களை கைவிட்டுவிட்டேன்

வருணம் ஆசிரமம் போன்ற எந்தொரு
உலக ஆசார வகைகளிலும் லட்சியம்
வைக்க வில்லை. சமய மத
அடையாளங்களை ஏற்றுக்கொள்ளவில்லை.

பொது நோக்கம் கொண்டுள்ளேன்.
தாழும் குணத்துடன் உள்ளேன்.

காம குரோதம் ஏற்பட்ட காலத்தில்
ஞான அறிவால் தடுத்துக் கொள்கிறேன்.

கடவுள் நிலையறிய உள்ளெழந்தி சிந்தித்து
சிந்தித்தலை நல்ல விசாரணை செய்கிறேன்.

அழுது அழுது உடல் நனைகிறது.
சிற்றம்பல கல்வியால் ஒளிவடிவம் பெறுவேன்
இது சத்தியம்.

இங்ஙனமாக, இங்ஙனமாக மட்டுமே தூய நல் உடம்பு பெற்றவர்களால் மட்டுமே ஒளிவடிவம் பெறமுடியும்.

போருற்று இறந்து வீண் போயினார் இன்னும் வீண்
போகாத படி விரைந்தே
புனிதமுறு சுத்த சன் மார்க்கநெறி காட்டிமெய்ப்
பொருளினை உணர்த்தி எல்லாம்
ஏருற்ற சுகநிலை அடைந்திடப் புரிதிநீ

- பாடல் : 3677

சாகாத கல்வியே கல்விஒன் றே சிவம்
தா னென அறிந்த அறிவே
தகுமறிவு மலமைந்தும் வென்றவல் லபமே
தணித்தபூ ரண வல்லபம்
வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்
விளையவிளை வித்த தொழிலே
மெய்த் தொழில தாகுமிந்ன் நகையும் ஒருங்கே
வியந்தடைந் துலக மெல்லாம்
மாகாத லுற எல்லாம் வல்லசித் தாகி நிறை
வானவரம் பே இன்பமாம்
மன்னும் இது நீ பெற்ற சுத்தசன் மார்க்கத்தின்
மரபென் றுரைத்த குருவே - பாடல் எண். : 3678

அன்பர்களே! சிற்றம்பல கல்வியை கற்க திருவருட்பிரகாச வள்ளலாரும், அவர் வழிநெறியை பரப்பிய சான்றோர்கள் தயவு சரவணனாந்தா, திரு. மகாலிங்கம், திரு. செகநாதன் அவர்களின் நூல்களும் நமக்கு துணை நிற்கும். இது சத்தியம்.

- அன்புடன் APJ. Arul

## "அறிஞர் சி. செகநாதன்"

மாபெரும் அறிஞர் அய்யா சி. செகநாதன் அவர்களின் திடீர் மறைவு செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தனர் பல அன்பர்கள். அவரது பிரிவால் வாடும் அன்னாரது குடும்பத்துக்கு ஆழ்ந்த இரங்கலை "கருணை" இதழும், மதுரை அன்பர்களும் தெரிவித்துக் கொள்கிறோம்.

பல நூல்களை எழுதியுள்ளவர் திரு. சி. செகநாதன் அவர்கள். அவரின் நினைவாக அவர்தம் நூலிலிருந்து சில பகுதிகள்.

**புத்தகம் : "நீங்களும் வள்ளலார் ஆக"....**
**"சத்தி, சத்தர்களை ஏவல் கொள்ளும் திறன் பெற்றது".**

சத்திகள், சத்தர்கள் என்பர்களைப் பெருமானாரைத் தவிரத் தமிழகத்தில் எந்த ஒரு ஞானியரும் குறிப்பிடவில்லை. அதுவும் முற்றிலுமாகக் குறிப்பிடவில்லை.

சத்தி, சத்தர்கள் யார் எனின், கர்ப்பகத்திற்குள் ஒரு உயிர் தோன்றியவுடன், அந்த உயிரைச் சூழ ஒரு முழுமையான சூழுடம்பை முற்றிலுமாக உருவாக்கித் தரும் ஆற்றலுடையவர்கள். இவ்வாறு பிண்டத்தை மட்டுமல்ல அண்டங்களையும் படைப்பவர்கள்.

தலை, அதனுள் மூளை, அதனுள் எண்ணங்கள் உற்பத்தி, சிந்தனை, அறிவு, உணர்ச்சி, உரோமம், கண்கள், காதுகள், வாய், நாக்கு, சுவை அறியும் சுவை அரும்புகள், மூக்கு, நுகர்வுத் திறன், கைகள், விரல்கள், இவற்றின் பொருத்துக்கள் (சாயிண்ட்) கால்கள், விரல்கள், கால்கள் 90" டிகிரியில் நேராக நிற்க, பாதங்களின் வடிவமைப்பு, வயிறு அதனுள் உடலின் ஆற்றலுக்கு வேண்டிய இதயம் கல்லீரல், மண்ணீரல், சிறுகுடல், பெருங்குடல், மலப்பை, மூத்திரப்பை, கர்ப்பப்பை, அவையவைகளில் ஊறும் திரவ ஊற்றுக்கள் ஜீரணம், அதில் உணவு இரத்தமாதல், இரத்தம் சுத்தப்படுத்தப்பட்டு விந்துவாதல், விந்துவில் மற்றொரு உடலைத் தருவதற்குரிய அமைப்புகள், இருபாலர்களின் பிறப்பு உறுப்புக்கள் மற்றும் பல.

இவைகளின் வடிவங்கள், நிறம், குணம், இயக்கம் போன்ற அனைத்தையும் தாய் கர்ப்பப்பையுள் யார் செய்து தருகிறார்கள்?

ஆண்டவர் தாம் அனைத்தையும் செய்ய வல்லார் என்பதோடு நின்று விடுகிறோம். அது அங்கே யாரால் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதைப் பற்றியே சிந்தனை இல்லை.

மேலே கண்டவை ஒரு உயிரினத்திற்குரிய முறைகள், இதுபோல எண்ணற்ற கோடி உயிரினங்கள் நிலத்திலும், எண்ணிடலங்கா உயிரினங்கள் கடலுள்ளும் வாழ்கின்றன. இப்படி கோடான கோடி, எண்ணற்ற கோடி உயிரினங்களுக்கும் உரிய உடல், கருவி, கரணங்களை இயக்கத்தை மற்றும் அனைத்தையும் சத்தி சத்தர்களே உருவாக்குகின்றனர் என்கிறார் வள்ளலார்.

ஒரு உதாரணம் : மனிதனுக்குரிய எலும்புகள், அதன் பொருத்துக்கள், அவற்றில் துவாரங்கள் மற்றும் இவற்றை முழுமையாக்கல், நரம்புகள், அதன் பரிணாமங்கள், இதயத்தின் வடிவம், செயல் திறன், பயன் அதுவே உடலத்தின் மூல உறுப்பாதல் போன்றவற்றை செய்யும் அறிவு, ஆற்றலை எண்ணியும் பார்க்கமுடியாதே! எழுத்திலும் காண முடியாதே.

இப்படிப்பட்ட நிலைகளை எல்லாம் கர்ப்பத்துள் உருவாக்கித் தரும் சத்தி, சத்தர்களை, அதன் செயல்பாட்டுத்திறனை, அதன் இயக்க முறையை எல்லாம் கண்ணாரக் கண்டு, உளமார அறிந்து, அருட்பாவில் திருவடிப் பெருமை என்ற பகுதியில் விளக்கி விளக்கிக் கூறும் திறன் அப்பப்பா!

இது மட்டும் அல்ல அண்டங்கள் அனந்த கோடிகளாக விரியும் தன்மையான, “எண்தர முடியாதிலங்கிய பற்பல அண்டமும் நிறைந்தொளிர் அருட்பெருஞ்சோதி” என்பார் அகவலில்.

இவ்வாறுள்ள அண்டங்கள் அனைத்தையும், அதுவும் ஒரு அண்டத்திற்கும், மற்றொன்றிற்கும் 101 கோடி வகைகளில் வித்தியாசமாகப் படைக்கப்பட்ட அண்டங்களை உருவாக்கித் தருவதும் சத்தி சத்தசுகளே ஆகும். இதனை

அருள் நிலை விளங்குசிற் றம்பலம் எனும்சிவ
சுகா தீத வெளிநடு விலே
அண்டபகிர் அண்டகோ டிகளுஞ் சரா சரம்
அனைத்துமவை ஆக்கல் முதலாம்
பொருள்நிலைச் சத்தரொடு சத்திகள் அனந்தமும்
பொற்புற விளங்கி ஓங்க - 3651

அடுத்து, நாம் முதலில் கண்ட கருவில் சத்திகள் பற்றிய பாடலைப் பார்ப்போம்.

விளங்கியஐங் கருச்சத்தி ஓர் அனந்தம் கருவில்
விளைகின்ற சத்திகள்ஓர் அனந்தம்விளை வெல்லாம்
வளம் பெறவே தருகின்ற சக்திகள் ஓர் அனந்தம்
மாண்படையத் தருவிக்கும் சக்திகள்ஓ ரனந்தம்
உளங்கொளநின் றதிட்டிக்கும் சக்திகள் ஓரனந்தம்
ஓங்கிய இச் சத்திகளைத் தனித்தனியே இயக்கி
தளங்கொள ஈண் டவ்வற்றிற் குட்புறம்நின்றொளிரும்
சாமி திரு வடிவப்பெருமை சாற்றுவதார் தோழி.

இப்பாட்டில் வரும் அனந்தம் என்பது ஒன்று போட்டு பத்தொன்பது பூஜ்ஜியங்களைப் போடுவது.

இவ்வாறு அண்ட பிண்டங்கள் அனைத்தினையும் உருவாக்கும் ஆற்றல் படைத்தவர்கள் சத்தி, சத்தர்கள் ஆவார்கள். ஆக, அருட்பெருஞ்சோதி ஆண்டவருக்கு அடுத்த நிலையில் உள்ளவர்கள்.

இவர்களையே ஏவல் கொள்ளும், அதுவும் தனது உள்ளம் விரும்பிய வண்ணம் சார்ந்து ஏவல் செய்யும்படிக்கு ஏவல் கொள்கிறார் வள்ளலார். இதனை

சத்திசத் தர்களெலாம் சார்ந்தென தேவல் செய்
சித்தியை அளித்த தெய்வநற் றாயே - 1098

அருட்பாவில் ஒருபாடல்

பூதமுத லாயபல கருவிகள் அனைத்தும்என்
புகழ்வழிப் பணிகள் கேட்பப்
பொய்படாச் சத்திகள் அனந்தகோடிகளும் மெய்ப்
பொருள்கண்ட சத்தர் பலரும்
ஏதமற என்னுளம் நினைத்தவை நினைத்தாங்
கிசைந்தெடுத் துதவ என்றும் - (3673)

இவ்வாறு சத்தி, சத்தர்களை ஏவல் கொண்டவர் வள்ளலார். இந்த ஆற்றலை ஆண்டவர் அவருக்குத் தந்தார்.

இதுபோல் யார் ஒருவர் சத்தி, சத்தர்களை எல்லாம் ஏவல் கொள்கிறாரோ அவர் வள்ளலார் ஆகலாம் தானே!

அவர் உங்களில் ஒருவராகவும் இருக்கலாம் அல்லவா?

“ஒன்பது திரைமறைப்பும் ஒழிந்து அற்றுப் போதல்”.

ஒவ்வொரு மனிதனுள்ளும் இருக்கின்ற அருட்பெருஞ்சோதியின் ஒளிப்பிழம்பை அவனுள் உள்ள 9 திரைகளே மறைத்துள்ளன என இதுவரை தமிழகத்தில் தோன்றிய எந்த ஞானியும் குறிப்பிடவில்லை. வள்ளலார் ஒருவரே ஒன்பது திரைகளின் மறைப்பை விரிவாகக் கூறுகிறார்.

மறைப்பு என்பதே மறப்பு என மருவி வழங்கலாயிற்று. திரைகள் 9ம் 9 விதமான நிலைகளை நம்முள் மறைத்து நிற்கின்ற பொழுது அந்த 9 நிலைகளையும் நாம் மறந்து நிற்கின்றோம்.

திரைமறைப்பைப் பற்றி எந்த ஞானியும் இதுவரை குறிப்பிடாதது ஏன் என நினைந்து பார்க்கின் அத்திரைகள் திருச்சிற்றம்பலத்திற்கு உள்ளே இருந்து மறைத்து நிற்கின்றன. இதுவரை வந்த ஞானிகள் எவரும் திருச்சிற்றம்பலத்தைக் கண்டு அதனுள் இருக்கும் பேரொளிப் பிழம்பாகிய இறைவனை காணவோ, காண நினைக்கவோ இல்லை. அதனால் அவர்கள் சிற்றம்பலத்தை நினைக்காத பொழுது அதை நோக்கிய பயணமும் அவர்களுக்கு இல்லை. அதனால் அவர்களால் திரைமறைப்பைப் பற்றி அறிய முடியாதிருந்தனர்.

வடலூாரில் ஞான சபையின் உள்ளே தான் திரை மறைப்பை வள்ளலார் காட்டியுள்ளார். அங்கே ஏழு திரைகள் மட்டுமே விலக்கப்படுகின்றன. வள்ளலாரும் சபையுள் ஏழு திரைகளையே வைத்துள்ளார் எனலாம். ஆனால் அகவலில் ஒன்பது திரைகளைப் பற்றி குறிப்பிடுகிறார். ஏன் அகவலில் கூறியபடி ஒன்பது திரைகளை சிற்சபையாம் ஞான சபையுள் பெருமாள் காட்டவில்லை?

இனி அந்த ஏழு திரைகளின் மறைப்பு என்னென்ன என்று பார்ப்போம்.

| | | | |
|---|---|---|---|
| 1. | கருப்புத்திரை | : | அரசராம் ஆண்டவனை மறைப்பது. |
| 2. | நீலத்திரை | : | ஆர் உயிராகிய ஒருமையை மறைப்பது. |
| 3. | பச்சைத்திரை | : | பரவெளிளையும், அதன் செயல்பாடுகளையும் மறைப்பது. |
| 4. | சிவப்புத்திரை | : | சன்மார்க்கச் சித்துகளால் 9 வகைச் சித்துகளை மறைப்பது. |
| 5. | வெள்ளைத்திரை | : | இயற்கை உண்மை பதிந்துள்ள வெளியை மறைப்பது. |
| 6. | மஞ்சள்திரை | : | பொருளாம் சிவவெளியை மறைப்பது. |
| 7. | கலப்புத்திரை | : | கருதும் கருத்தாம் அனுபவங்களை மறைப்பது. |

இவ்வேழு திரைகளைத் தவிர வெவ்வேறு திரை என்பது விடய நிலைகளையும், நம்முள் உள்ள தத்துவ நிலைகளை தனித்தனித் திரையும் மறைத்துள்ளன என்கின்றனர். மேற்கூறிய ஏழும் மனிதன் அகத்துள் உள்ள வெளிகள். மற்ற இரண்டும் மனிதனின் புறச் செயல்கள். ஆகவே, திருச்சபையுள் இரண்டு திரைகளை வள்ளலார் காட்டவில்லை.

இந்தக் கட்டுரையின் நோக்கம் என்னவென்றால், திரைமறைப்பு ஏன் ஆண்டவரால் ஏற்படுத்தப் பெற்றது? அத்திரை மறைப்பு எதனால் விலகும்? என்பது பற்றிய ஆய்வேயாகும்.

மேலே காட்டிய ஏழு மறைப்பும் நமது ஆன்மாவின் உள்ளே (ஒருமை) உள்ள மறைப்புகள் என்பதை ஊன்றிக் கவனிக்கவும். ஆக, நமது ஆன்மாவாம் ஒருமையே சிற்றம்பலமாம் ஞானசபை என்பதும், அதனுள் இந்த ஏழு திரைகளும் உள்ளன என்பதும் தெரிகிறது.

கோடான கோடிப் பிறவிகளிலும் நமது ஆன்மா பயணித்திருக்கிறது. அந்தப் பயணிப்பில் இந்த ஆன்மாவினுள் கருணை என்பதே தோன்றவும் இல்லை. வெளிப்படவும் இல்லை. ஐந்தறிவு வரை உள்ள உயிரினங்கள் முழுக்க ஒரு உயிரைக் கொன்று, அதன் புலாலை உண்டு பசி தீர்வதே ஆன்மத் தீர்வாக இயற்கை படைத்துள்ளது.

ஆறாவது அறிவாகிய மனிதப் பிறவி கோடானு கோடியிலும், தன்மை வேட்கையிலும், தத்துவது துரிசுகளிலும், புண்நலப் புலன்களின் போகத்திலும் பொழுதைக் கழித்தோமோ தவிர, ஆன்ம முன்னேற்றத்திற்கான செயல் அணுவளவும் புரிந்திருக்கவில்லை. அம்முன்னேற்றம் எதுவென்றும் புரியவில்லை.

நம்போல் மிகச் சாதாரணமானவர்களை விட்டு விடுக. இதுவரை தமிழகத்தில் தோன்றிய ஞானிகள் எவருமே இந்த ஒரு பேருண்மையை அறிந்திருக்கவில்லை.

அது என்ன பேருண்மை என வள்ளவாரே கூறுமாறு கேட்போம்.

திரையறு பெருங்கருணை வாரியே எல்லாஞ் செய்
சித்தே எனக்கு வாய்த்த
செல்வமே ஒன்றான தெய்வமே உய்யுவகை
தெரித்தெனை வளர்த்த சிவமே

அந்தப் பேருண்மை கருணை என்கிறார்.

நாம் முன்னர்க் கண்ட 7 மற்றும் 9 திரைகளையும் நம்முள் அற்றுப் போகும்படி செய்வது கருணை ஒன்றே அன்றி வேறில்லை என்கின்றார்.

சிற்சபைக்குள் ஒருவர் சென்று, திரைகளை எல்லாம் இல்லாது ஆக்கி, அருட்பெருஞ்சோதியைக் கண்டு, அவரோடு கூடி, அவராகவே ஆக வேண்டுமாயின் அதற்குரிய ஒரே தகுதி தனிப் பெருங்கருணையே அன்றி வேறில்லை. இதனையே திரையறு பெருங்கருணை என்ற சொல்லால் சுட்டுகிறார்.

யார் ஒருவர் கருணையே வடிவாய் பிறர்களுக்கடுத்த கடுந்துயர் அச்சமாதிகளை விலக்குகிறாரோ அவரே திரை மறைப் பெல்லாம் தீர்த்தவர் ஆவார்.

வள்ளலார் தமக்குள் உள்ள திரைகள் எல்லாம் அற்று விழுந்தொழிந்தன என்கிறார். இதனை

திரையற்று விட்டது செஞ்சுடர் தோன்றிற்று
பரைஒளி ஓங்கிற் றென்றுந் தீ பற
பலித்தது பூசைஎன்று உந்தீ பற - 4900

என்று பாடுகிறார். தம்முள் இருந்த திரைகள் அனைத்தும் அற்று ஒழிந்ததாலேயே கண்டேன். திருச்சிற்றம்பலத் தானந்த நாடகம் என்றும், சத்திய ஞான சபை எனுள் கண்டனன் என்றும், பாடிக் களிக்கின்றார் வள்ளலார்.

இதுபோல் யார் ஒருவர் தன்னுள் உள்ள ஆன்மச் சிற்சபையும் உள்ள திரைகள் ஏழினையும் அற்றொழியச் செய்ய கருணையே வடிவாய் ஆகின்றாரோ, அவர் நிச்சயமாக வள்ளலார் ஆகலாம் தானே.

இப்பெரிய பேற்றுக்குரியவர் நீங்களாகவும் இருக்கலாம் அல்லவா?

## மந்திரம்

### புத்தகம் : அகவலில் அறியத் தக்க ஆயிரம்

கே: அகவலில் மந்திரம் என்ற பகுதியில் கூறப்பெறும் மந்திரங்களின் வகை யாது?

ப : 1. நாத மந்திரம், 2. புனித மந்திரம், 3. வாய்மை மந்திரம், 4. மறைமுறை மொழியும் மந்திரம், 5. உலவாது ஓங்கு மந்திரம் என ஐந்து வகையாக மந்திரப் பகுதியில் வகைப்படுத்துகிறார்.

கே: நாத மந்திரம் நமக்கு அளிப்பது யாது?

ப : வானகமே பெறுவதற்கு அரிய வகை ஆற்றல்களை எல்லாம் விரைந்து நமக்கு அளிப்பது நாத மந்திரம் ஆகும். வான்பெறற் கூரிய வகையெலாம் விரைந்து நான் பெற அளித்த நாதமந்திரம்.

கே: புனித மந்திரத்தின் திறம் யாது?
ப : கற்ப காலம் என்று கூறப்பெறும் 86,40,000 ஆண்டுகள் போல பலப்பல கற்பங்கள் சென்றாலும் நம்மை அழியாது பொற்புறச் செல்வது புனித மந்திரம் ஆகும்.
"கற்பம் பலபல கழியினும் அழியாது" பொற்புற வளித்த புனிதமந் திரமே

கே: கற்பக் காலம் என்று கூறப் பெறும் 86,40,000 ஆண்டுக்குரிய விளக்கம் யாது?
ப : ஒரு பிரமனின் ஆயுள் 4,32,000 ஆண்டுகள்.
ஒரு திருமாலின் ஆயுள் 8,64,400 ஆண்டுகள்.
ஒரு ருத்திரனின் ஆயுள் 12,96,000 ஆண்டுகள்.
ஒரு மகேசுவரனின் ஆயுள் 17,28,000 ஆண்டுகள்.
ஒரு சதாசிவனின் ஆயுள் 43,20,000 ஆண்டுகள்.

| | |
|---|---|
| ஒரு பிரமனின் ஆயுள் | 4,32,000 ஆண்டுகள். |
| ஒரு திருமாலின் ஆயுள் | 8,64,400 ஆண்டுகள். |
| ஒரு ருத்திரனின் ஆயுள் | 12,96,000 ஆண்டுகள். |
| ஒரு மகேசுவரனின் ஆயுள் | 17,28,000 ஆண்டுகள். |
| ஒரு சதாசிவனின் ஆயுள் | 43,20,000 ஆண்டுகள். |
| | **86,40,000 ஆண்டுகள்** |

இதுவே சதுர்யுகக் கணக்கு, இப்படிப்பட்ட ஒரு யுகத்தையே ஒரு கற்பகக்காலம் என்றனர். இந்த 86,40,000 ஆண்டுகள் போல பற்பல கற்பங்கள் சென்றாலும் நாம் அழிவுறாது நம்மை இருக்கச் செய்வது புனித மந்திரமாகும். "கற்பம் பலபல கழியினும் அழியாப்" பொற்புற அளித்த புனிதமந் திரமே.

கே: வாய்மை மந்திரம் யாது?

ப : அகரம், உகரம், ஆகியது ஓம். இவற்றோடு சிகரம், வகரம் சேர சிவயநம ஆகும். ஓம் சிவாய நம என்பதே வாய்மை மந்திரம் ஆகும். "அகரமும் உகரமும் அழியாச் சிகரமும் வகரமும் ஆகிய வாய்மைமந் திரமே".

கே: அருட்பெருஞ்சோதி எந்த வடிவில் உள்ளார்?

ப : சிகரமும், வகரமும் ஆகிய சிவயநமவொடு. அகரமும் உகரமும் ஆகிய ஓம் என்பதனோடு சேர்ந்து சிவயநம ஓம் என்ற மந்திர வடிவில் உள்ளார் அருட்பெருஞ்சோதி ஆண்டவர். "சிகரமும் வகரமும் சேர்தனி உகரமும் அகரமும் ஆகிய அருட்பெருஞ் சோதி" - 174

கே: முந்துறும் மறைமுறை யாது?

ப : ஐந்தெழுத்தாகிய சிவயநம, நமசிவய, ஆறெழுத்தாகிய சரவணபவ, நான்கெழுத்தாகிய சிவ சிவ, எட்டெழுத்தாகிய ஓம் நமோ நாராயணாய இவைகளே முந்துாறு மறையின் முறைகள் ஆகும்.

கே: இப்படிப்பட்ட முந்துறு மறைகள் முறையாகச் செபித்து மொழியும் மந்திரம் யாது?

ப : அருட்பெருஞ்சோதி ஆண்டவரே ஆகிய மந்திரமாம் அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி என்ற மந்திரத்தையே முறையாக ஓதிக் கொண்டிருக்கின்றனவாம். அவைகள். "ஐந்தென எட்டெனு ஆறென நான்கென முந்துறு மறைமுறை மொழியும் மந்திரமே."

கே: வேதங்களும், ஆகமங்களும் தாம் நிலைபெற்று நிற்க அதாவது உவவாது இருக்க ஓதும் மந்திரம் யாது?

ப : உலவாது ஓங்கு மந்திரமாகிய மகாமந்திரம் ஆகிய அருட்பெருஞ்சோதி மந்திரத்தையே வேதங்களும் ஆகமங்களும் தாம் நிலை பெற ஓதுகின்றனவாம். "வேதமும் ஆகம விரிவுகள் அனைத்தும் ஓதநின் றுலவா தோங்குமந் திரமே"

கே: மந்திரம் என்ற பகுதியில் கூறப்பெறும் மந்திரம் யாது?

ப : இருகலை உயிர்ப்பு இப்பொழுது நமக்குள் ஓடிக் கொண்டிருக்கின்றன. இவைகள் இணைந்து ஒன்றாகிவிட்டால் உயிர்ப்பானது உடலை விட்டு கீழறங்கி ஓடாது. உலவாது உள்ளுள்ளேயே நிலைத்துவிடும். இந்த நிலைத்த உயிர்ப்பே ஒருமைக்கதியாகும். இதனையே மந்திரமாக இப்பகுதி முழுக்கக் கூறப் பெற்றுள்ளதாகும்.

கே: மந்திரப் பகுதியில் கூறப்பெற்றுள்ள கண்ணிகள் எத்தனை?

ப : ஐந்து கண்ணிகள் பத்து வரிகளில் மந்திரப் பகுதி அகவலில் கூறப்பெற்றள்ளது.

கே: மணி, மந்திரம், மருந்துப் பகுதிகளில் கூறப் பெற்றுள்ள கண்ணிகள், வரிகள் எத்தனை?

ப : நவமணி என்ற பகுதியில் 10 கண்ணிகள் 20 வரிகள்
மந்திரம் என்ற பகுதியில் 5 கண்ணிகள் 10 வரிகள்
மருந்து என்ற பகுதியில் 8 கண்ணிகள் 16 வரிகள்
மொத்தம் 23 கண்ணிகள் 46 வரிகள்

## “118 அமுதத்தின் முழு ஆற்றல் :-

அமுதம் என்பது வழக்கில் வழங்கப்படுகின்ற சொல்லே. ஆயினும், அது பற்றிய விளக்கம் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏதோ கூறப்படுகின்றதே அன்றி அதன் சுவை, ஆற்றல் என்பதை இதுவரை யாரும் விரிவாகக் கூறவில்லை.

அமுதம் உண்டவர்கள் சாக மாட்டார்கள் என்ற ஒரே செய்தியைத் தவிர வேறு எதுவும் வள்ளலார் காலம் வரை தெரியவில்லை. யாரும் தெரியப்படுத்தவுமில்லை.

வள்ளுவர் வான் மழையை தான் அமிழ்தம் என்று உணரற் பாற்று என்று கூறி, அமுதம் என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தி உள்ளாரே அன்றி விளக்கம் கூறவில்லை.

வேறு எந்த ஞானிகளும் அமுதத்திற்குரிய சரியான விளக்கம் கூறவில்லை. வள்ளலார் ஒருவரே அமுதத்தின் சுவை. அதன் ஆற்றலை முழுக்க அகவலில் விவரிக்கின்றார். பார்ப்போம்.

கரும்புச் சாற்றோடு நன்றாகக் கனிந்த மா, பலா, வாழை ஆகிய பழங்களிலிருந்தும் எடுத்த சாற்றோடு சுவை மிகுந்த இனிமையான பசுவின் பாலை மிகக் கலந்து, இவற்றினோடு கொம்புத் தேனையும் கூட்டிக் கலந்து ஒன்றாக்கி, அடுப்பில் ஏற்றி, அதனோடு மணப் பொடிகளையும் சேர்த்து, மிக நன்றான பதத்தில் இறக்கி வைத்து அதனையே உணவு என பல காலமும் உரைத்து உரைத்து நின்றாலும் இந்த அமுதத்தின் சுவைக்கு, இன்பத்திற்கு நிகர் ஆகாத வண்ணத்தையும், வனப்பையும் உடையது என்கிறார். இதனை,

கரும்புறு சாறும் கனிந்தமுக் கனியின்
விரும்புறு ரதமும் மிக்கதீம் பாலும்

குணங்கொள் கோற்றேனும் கூட்டியொன் றாக்கி
மணங்கொளப் பதஞ்செய் வகையுற இயற்றிய
உணவெனப் பல்கால் உரைக்கினும் நிகரா
வணமுறு இன்ப மயமே அதுவாய்.

என அமுதத்தின் சுவைக்கு உவமை கூறி, அந்த உவமையை பலகாலும் இதுபோல, இதுபோல எனக் கூறிக் கொண்டிருந்தாலும் நிகரில்லாத இன்பமே மயமானது என்று வரையறை செய்கிறார்.

அடுத்து அமுதத்தின் பேராற்றல் பெருந்திறலைப் பட்டியல் இடுகிறார்.

அமுதமானது உடலில் கலந்தால், அவரது உடம்பு அறிவேமயமான உடலாக ஆகிவிடும். அவ்வுடலின் நன்மையையும், நலத்தினையும் எண்ணியும் பார்க்க முடியாதபடி அவ்வுடல் உயர்ந்த நலமும், நன்மையையும் விளைவிப்பதாகவும், விளக்குவதாகவும் அமையும். அளவிட்டுக் கூற முடியாதபடிக்குள்ள உயர்ந்த தன்மையை உடையதாக இருக்கும்.

இவ்வாறு அவ்வுடல் இருப்பதால், அது என்றும் இறவாத உடலாக அமையும். அப்புறம் உயிர், உள்ளம், உடம்பு எல்லாம் இனிமை பயப்பதாக ஆகும். அச்சுவையே இயற்கை உண்மை உடலின் இயற் சுவையாகும். அப்புறம் அவ்வுடல் எல்லாம் வல்லசித்து எனப்படும் இயற்கையாகவே வந்தடைந்து நிற்கும். அப்புறம் சாகா வரமாகிய சாகாக் கல்வியின் 43 நிலைகளும் வந்து வாய்க்கும் வரம் கிடைக்கும். அடுத்து அவ்வுடலுக்கு தனித்த பேரறிவாம் அருளறிவு கிடைக்கும். இவ்வல்லபம் அவ்வுடலின் மேற்காதல் கொண்டு வந்து சேரும். அடுத்து யாரும் எதனாலும், எக்காலத்தும் செய்ய முடியாத அனந்தானந்தங் கோடிச் சித்துகளும், அவற்றால் உலக உயிர்கள் நலம் பெறுவதைக் கண்டு இன்பமுறும் தனி இன்பமும் கிடைக்கும்.

மேற்கண்ட எல்லா ஆற்றல்களையும், சிறிதும் மயக்கம் இல்லாமல் தருவதாக அமையும் வள்ளற் தன்மை பெற்றது அமுதம். மேலும் அது எல்லா நிலைகளின் பூரண வடிவாகத் திகழ்வது. இது ஆரண, ஆகம முடிபைக் கடந்து நிற்பது. இவ்வளவு விளக்கத்தையும்

கலந்தறி வுருவாய்க் கருதுதற் கரிதாய்
நலந்தரு விளக்கமும் நவிலருள் தன்மையும்
உள்ளதாய் என்றும் உள்ளதாய் என்னுள்
உள்ளதாய் என்றன் உயிருளம் உடம்புடன்
எல்லாம் இனிப்ப இயலுறு சுவையளித்
தெல்லாம் வல்லசித் தியற்கைய தாகி
சாகா வரமும் தனித்தபேர் அறிவும்
மாகா தலிற்சிவ வல்லப த்தியும்
செயற்கரும் அனந்த சித்தியும் இன்பமும்
மயக்கறத் தருந்திறல் வண்மைய தாகி
பூரண வடிவாய்ப் பொங்கிமேற் ததும்பி
ஆரண முடியுடன் ஆகம முடியும்
கடந்தென தறிவாம் கனமேற் சபைநடு
நடந்திதழ் கின்றமெய் ஞானஆர் அமுதே

என்று அகவலில் குறித்துள்ளார்.

இவ்வாறு ஒரு அமுதத்தின் ஆற்றல் விரிவை யாரும் இதுவரை கூறிடவில்லை. மேலும் இந்த அமுதம் என்னுள் உள்ளது என்றும் அவர் கூறியுள்ளதை நோக்கும் பொழுது, இப்பெரும் பேற்றை யாரும் பெற்றிடவில்லை. அதனால் கூறிடவில்லை என்றே தோன்றுகின்றது.

வள்ளலார் பெற்ற அமுத வரம் இது.

நன்றி : அருளகம், புதுக்கோட்டை.

* * * * *